தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

ஆண்டிறுதிப் பரீட்சை பரீட்சை 2024

ஆண்டு: 7 திகதி: 23.11.2024

நேரம்: 02:00 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மங்கையற்கரசி விஜயகுமார்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	18	
வினா 2	10	
வினா 3	20	
வினா 4	15	
வினா 5	17	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	18	பக்கம்	2

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1 முதல் 6 வரை உள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

மூவேந்தர்கள்.



இந்தியாவின் தென்பகுதி பழங்காலத்தில் தமிழகம் என வழங்கப்பட்டது. அப்பகுதி சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என மூன்று நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்நாடுளை ஆண்டு வந்தவர்கள் தமிழ் மன்னர்கள். அம்மன்னர்கள் வீரமும் மதிநுட்பமும் மிக்கவர்கள். அவர்களுடைய ஆட்சியில் தமிழகம் சீருடனும் சிறப்புடனும் விளங்கியது.

சேர நாட்டை ஆண்டு வந்தவர்கள் சேர மன்னர்கள். அந்நாட்டுக் கொடியில் வில் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் ஆகிய இருவரும் சேர மன்னர்களில் புகழ்பெற்றவர்கள். சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை படைத்தார்.

சோழ நாட்டை சோழர்கள் ஆட்சி புரிந்தார்கள். அவர்களின் கொடியில் புலி உருவம் இடம் பெற்றிருந்தது. சோழர்களில் கரிகால் வளவன், இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் தலைசிறந்த மன்னர்கள். இராசேந்திரன் வலிமையான கப்பற்படையைப் பெற்றிருந்தான். அவன் அப்படையின் உதவியால் பல தென்கிழக்காசிய நாடுகளை வென்றான்.

பாண்டிய மன்னர்கள் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தனர். பாண்டிய நாட்டுக் கொடி மீன் சின்னத்தைக் கொண்டிருந்தது. பாண்டிய மன்னர்கள் தமிழ்ப்பற்று மிக்கவர்கள். அவர்கள் தங்கள் தலைநகரான மதுரையில் சங்கம் நிறுவி இயல், இசை, நாடகம் ஆகிய

முத்தமிழையும் வளர்த்தார்கள். நெடுஞ்செழியன், அறிவுடைநம்பி ஆகியோர் பாண்டிய மன்னர்களில் புகழ் பெற்றவர்கள்.

1. அக்காலத் தமிழகம் எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது?

_____

2. சேர மன்னர்களில் சிறப்புற்று விளங்கியவர் யாவர்?

_____

3. இளங்கோவடிகள் இயற்றிய நூலின் பெயர் என்ன?

_____

4. தென்கிழக்காசிய நாடுகளை வெற்றிகொண்ட சோழன் யார்?

_____

5. பாண்டிய நாட்டின் தலைநகரம் எது?

_____

6. பாண்டியர்கள் எவ்வாறு தமிழ் வளர்த்தார்கள்?

_____

வினா இல	2	புள்ளிகள்	10	பக்கம்	4

பின்வரும் தனிவாக்கியங்களை தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுங்கள்.

1. இளங்கோ வேகமாகத் தன் அறைக்குள் நுழைந்தான்.

அவன் புத்தகப்பையைத் திறந்தான்.

அவன் புத்தகத்தை எடுத்தான்.

_____

_____

_____

2. அபிராமி அதிகாலையில் எழுந்தாள்.

அவள் காலை கடன்களை முடித்தாள்.

அவள் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

_____

_____

_____

3. ஆயன் நூல் நிலையத்திற்குச் சென்றான்.

அவன் ஒரு புத்தகத்தை இரவல் வாங்கினான்.

அவன் அதைப் படித்தான்.

_____

_____

_____

4. துரைராசா பேருந்து நிலையத்திற்குச் சென்றார்.

அவர் பேருந்தில் ஏறினார்.

அவர் பணிமனைகுச் சென்றார்.

_____

5. பூங்கோதை பேச்சுப் போட்டியில் பங்கேற்றாள்.

அவள் திறைமையாகப் பேசினாள்.

அவள் முதற்பரிசு பெற்றாள்.

வினா இல	3	புள்ளிகள்	20	பக்கம்	5

பின்வரும் சொற்களை வைத்து நான்கு சொற்களுக்குக் குறையாமல் வசனம் எழுதுங்கள்.

1 தொழில் நுட்பம்

2 கொண்டாட்டம்

3 திருமணவிழா

4 பாரம்பரிய உணவு

5 பெற்றோர்

6 அன்பு

---

7 பூர்வீகம்

---

8 விடுமுறை

---

9 அப்துல் கலாம்

---

10 வீரபாண்டிய கட்டப்பொம்மன்

வினா இல	**4**	**புள்ளிகள்**	**15**	**பக்கம்**	**6**

பின்வரும் தலைப்பில் ஒன்றைத் தெரிவு செய்து 70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுங்கள்.


1. எமது தமிழ்க் கல்வி நிலைத்தில் நடைபெற்ற வாணிவிழா பற்றி விபரித்து உமது தாத்தா/பாட்டிக்கு..

2. நீர் சமைத்து மகிழ்ந்து உண்ட ஒரு பாரம்பரிய உணவு பற்றி நீர் விரும்பிய ஒருவருக்கு..

3. ஆஸ்திரேலியாவில் நீங்கள் கண்டுகளித்த (அனுபவித்த) பிரபலமான வசந்தவிழாக்கள் (Spring Festival) பற்றி உமது நண்பிக்கு/நண்பனுக்கு..

வினா இல	5	புள்ளிகள்	4x4+1=17	பக்கம்	8

கீழே கொடுக்கபட்டுள்ள விளம்பரத்தை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்குப் பூரணமான விடையை எழுதுங்கள்.



1. இக் கலைவிழா அழைப்பிதழ் எந்த தமிழ் பாடசாலையின் அழைப்பிதழ்?

_____

_____

2. கலைவிழா எங்கு எப்போது நடைபெற்றது?

_____

_____

3. எத்தனையாவது ஆண்டுக் கலைவிழாவைக் கொண்டாடினார்கள்?

_____

4. எத்தனை மணியிலிருந்து இந்நிகழ்வு நடைபெற்றது?

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	9

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.

1. புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் ஊடகங்களின் பங்கு.
2. தமிழ் வரலாற்று நாயகர்கள்.
3. சாதனை படைத்த தமிழர்கள்.